**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**/ IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 176/2019 |
| Name | : Kulandaivelu |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.01.2026

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**சாட்சி Micro soft teams செயலி வாயிலாக ஆஜரான பின்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அரியலுார் மருத்துவ கல்லுாரி மருத்துவமனையில் பணியாற்றி தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 08.05.2016 கோவை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லுாரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பணியில் இருந்த போது குற்ற எண். 112/2016 வழக்கில் மடத்துக்குளம் காவல் உதவி ஆய்வாளரின் வேண்டுகோளின் படி இறந்து போன சுமார் 70 வயது மதிக்கத்தக்க ராஜு என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். உடல் முழுவதும் விரைப்புத் தன்மை காணப்பட்டது. கை, கால் நகங்கள் வெளர்ந்து காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் குறித்து பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். அவருக்கு ஏற்பட்ட தலை காயங்களினால் மற்றும் அதன் பக்க விளைவுகளால் மரணம் சம்பவத்திருக்க கூடும் கருத்துறு உடன் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போனவருக்கு தலையின் முன் பகுதியில் காயம் காணப்படவில்லை என்றால் சரிதான். தலையின் பின் பகுதியில் இருந்தது பழைய காயம் இல்லை. இறந்து போன நபர் மது அருந்ததியதற்குண்டான அறிகுறிகள் இருந்ததா என்றால் இல்லை. இரைப்பையில் 100 மில்லி மஞ்சள் நிற திரவம் எந்த வாசனையும் இல்லாமல் இருந்தது. இறந்து போனவருக்கு ஏற்பட்ட காயம் விபத்தினால் ஏற்பட்டது என்று குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல இறந்து போனவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணமாக ஏற்பட வாய்ப்பில்லை. விபத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளது. இறந்து போனவருக்கு அதிகப்படியான காயங்கள் தலையின் பின்புறம் இருந்தது.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.30 13:21:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்